பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 03 திங்கட்கிழமை 21.11.2022 கதிர் 268

## ‘பட்ஜட்’ நிறைவேறிய பின்பே புதிய ஆளுநர்கள் நியமனம்

அரசின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒன்பது மாகாணங்களுக்கும் புதிய ஆளுநர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்துள்ளார்.

அவர்களுள் ஒருவர் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார என்று அறியமுடிகின்றது. அவர் 2

# தமிழர் வாழ் தேசங்களில் ‘மாவீரர் வாரம்’ ஆரம்பம்

## யாழ். பல்கலையில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி







(இ.கலையமுதன்)

**தமிழ் மக்களின் விடிவுக்காகத் தங்களை ஆகுதியாக்கியவர்களை நினைவேந்தும் மாவீரர் வாரம் தமிழர் வாழ் தேசமெங்கும்இன்றுஆரம்பமாகியுள்ளது.** 8

## நினைவேந்தல் உரிமையை அரசு கட்டுப்படுத்தக்கூடாது

### சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து



தமிழர்களுக்கான நினைவேந்தல் உரிமையை அரசு கட்டுப்படுத்தக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தினார்.

மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகளுக்காக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்பரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 2

## புலம்பெயர் தமிழர்கள் எல்லோரும் தமிழீழ விடுதலைப்புலிகள் அல்லர்

### சஜித் அணி தெரிவிப்பு

புலம்பெயர் தமிழர்கள் எல்லோரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ அல்லர். எமது நாட்டைப் பற்றிச் சிந்திக்கின்ற நாட்டுக்கு உதவி செய்ய விரும்புகின்ற புலம்பெயர் 2




## வரும் சுதந்திர தினத்துக்குள் அரசியல் தீர்வைத் தாருங்கள்

### சபையில் கூட்டமைப்பு கோரிக்கை

தமிழர்களாகிய எமக்கான அரசியல் தீர்வை எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் தாருங்கள்.

– இவ்வாறு அரசிடம் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் அவர் உரையாற்றும்போது மேலும் 2

## நாடாளுமன்றில் மாவீரர்களுக்கு இன்று அஞ்சலி

இலங்கை நாடாளுமன்றத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், இன்றைய சபை அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி 2

## ஓமானுக்குப் பெண்களைக் கடத்திய மற்றுமொருவரும் விளக்கமறியலில்

மனிதக் கடத்தல் தொடர்பில் அவிசாவளை – புவக்பிட்டி பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் கொழும்பு – கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, அவரை எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின், 2

## கட்சித் தலைவர்களுக்கும் வலை; ரவியின் வீட்டில் இரகசியப் பேச்சு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதலைமையிலான அரசைப் பலப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை வளைத்துப் போடும் வேலைகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதை அறியமுடிகின்றது.

அரசு அதிகமாகக் கண் வைத்திருப்பது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில்தான். அக்கட்சி உறுப்பினர்கள் பலரை இரகசியமாகச் சந்தித்துப் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என்று அறிய முடிகின்றது.

ஜனாதிபதியைத் 8

## சந்தேகநபரான பெண் சி.ஐ.டியினரால் கைது



இலங்கையிலிருந்து ஓமானுக்கு மனிதக் கடத்தலில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை அவர் கொழும்பு – கோட்டையிலுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்ததையடுத்து கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் 8

## ரயிலுடன் மோதுண்டு மாணவி பலி



கண்டி – அஸ்கிரிய பகுதியில் ரயிலுடன் மோதுண்டு சிறுமி ஒருவர் 2

## பருத்தித்துறையில் மாவீரர் வார நிகழ்வு



மாவீர்வாரம்இன்றுஆரம்பமாகியுள்ள நிலையில், பருத்தித்துறைநீதிமன்றவீதியில்அமைக்கப்பட்டுள்ள 2

## வவுனியாவில் தங்கையை சீரழித்த அண்ணன் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியா, பட்டக்காடு பகுதியில்16வயதுடையதங்கையைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கிய அண்ணனை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தந்தையின்றி தாயின் அரவணைப்பில் சகோதரன், சகோதரி வசித்து வந்த நிலையில் தனிமையிலிருந்த தங்கையை அண்ணன் 2

## நினைவேந்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தல் ஏற்பாட்டுப் பொதுக்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களின் ஏற்பாட்டில் வாகரை – கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தைத் துப்பரவு செய்யும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்கள், நினைவேந்தல் ஏற்பாட்டுப் பொதுக்கட்டமைப்பின் உறுப்பினர்கள், பிரதேச பொதுமக்கள் கலந்துகொண்டு மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவுப் பணியை மேற்கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனும் சென்று துப்பரவுப் பணியைப் பார்வையிட்டதோடு தானும் கலந்து கொண்டார்.

அதன்போது ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சாணக்கியன் எம்.பி.,

மக்கள் இந்தச் சிரமதானப் பணியில் மிகவும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டிருக்கின்றனர். இதற்கு அரசு பச்சைக்கொடி காட்டியுள்ளனர். இருந்தபோதிலும் எமக்கான உரிமைகளில் இதுவும் ஒன்று. எமது அரசியல் உரிமைக்காக – எமது விடுதலைக்காகப் போராடியவர்களை அவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் உணர்வுபூர்வமாக நினைவுகூரும் இந்த நிகழ்வானது எதிர்வரும் காலங்களில் எவரிடமும் அனுமதி கோரி செயற்படுத்தும் நிகழ்வாக இருக்கக்கூடாது. எமக்கான உரிமையை – எமது சுதந்திரத்தை அரசு கட்டுப்படுத்தக்கூடாது –என்றார்.

## நாடளுமன்றில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தினார். தனது உரையை ஆரம்பிக்கும் போது, இன்று மாவீரர் வாரம் ஆரம்பமாகின்றது. அவர்களுக்கு முதலில் அஞ்சலியை இதயபூர்வமாக செய்து கொண்டு எனது உரையைத் தொடர்கின்றேன் – என்றார்.

## ரயிலுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார். 16 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலதிக வகுப்புக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

சிறுமியின் சடலம் கண்டி போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## வரும் சுதந்திர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:–

எமது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்காவிட்டால், அடுத்த தசாப்தத்தில் இன்னுமொரு சாணக்கியன், சுமந்திரன், சம்பந்தன், சிறீதரன் போன்ற பலர் வருவார்கள். இது மாறி மாறி நடந்து கொண்டே இருக்கும்.

சர்வதேசத்தைத் திருப்திப்படுத்த வார்த்தைகளை விடாமல், எமக்கான அரசியல் தீர்வை எதிர்வரும் சுதந்திர தினத்துக்குள் தாருங்கள்.

தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை இல்லை, அக்கறைஇல்லைபோன்றவிடயங்களை நீங்கள் பார்க்கத் தேவையில்லை.

நாட்டை ஆட்சி செய்த மஹிந்த, கோட்டாபாய – அண்ணன், தம்பிகளே ஒற்றுமை இல்லாமல் நாட்டை நாசமாக்கிவிட்டார்கள்.

ஆகவே, தமிழ்க் கட்சியினராகிய நாம் கருத்து வேறுபாட்டைக் கொண்டிருந்தாலும் தமிழ் மக்களுக்காக ஒன்றாக நின்றே செயற்படுவோம். எங்களால் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது – என்றார்.

## ‘பட்ஜட்‘ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட மத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்படவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

அவரது ஐ.தே. க.பொதுச் செயலாளர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்படவுள்ளார் என்றும் மேலும் அறியமுடிகின்றது.

## புலம்பெயர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் அதிகம் உள்ளனர். இவர்களை நாம் நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இவ்வளவு காலமும் இந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசு செய்தது இனவாதத்தைக் கக்கியதுதான். அதைப் பரப்பித்தான் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அதனால்தான் நாட்டுக்கு இந்த நிலைமை. முதலில் இனவாதத்தை இல்லா தொழியுங்கள். அப்போதுதான் எல் லோரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை அபிவிருத்தி செய்வது பற்றி பேசலாம்.

வெளிநாட்டில் எமது வளங்கள் அதிகம் இருக்கின்றன. புலம்பெயர் தமிழர்கள் எல்லோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அல்லர். எமது நாட்டைப் பற்றிச் சிந்திக்கின்ற – நாட்டுக்கு உதவி செய்ய விரும்புகின்ற புலம்பெயர் தமிழர்கள் அதிகம் உள்ளனர். இவர்களை நாம் நாட்டின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர்களைக்கூட எமது பக்கம் எடுக்கின்ற திறமை எம்மிடம் இருக்க வேண்டும். அவர்கள் எமது நாட்டவர்கள். கடந்த காலங்களில் தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். அதைச் சரி செய்து கொண்டு இவர்களை எம் பக்கம் இழுக்க வேண்டும் – என்றார்.

## வவுனியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்ட சகோதரி மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் 26 வயதுடைய சகோதரனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## ஓமானுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித கடத்தல் மற்றும் சமுத்திர குற்றச் செயல்கள் விசாரணைப் பிரிவின் விசாரணை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் மாலை அவர் கைதானார்.

ஓமான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில்தொழில்பெற்றுத்தருவதாகப் பெண்களை ஏமாற்றி இடைத்தரகராகக் குறித்த நபர் செயற்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

45 வயதான அவர் அவிசாவளை – புவக்பிட்டி பகுதியைச் சேர்ந்தவராவார்.

சந்தேகநபரால் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கு பிரச்சினையை எதிர்நோக்கிய நிலையில் மீண்டும் நாடு திரும்பிய பெண்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பருத்தித்துறை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொது ஈகைச்சுடரை இரண்டு மாவீரர்களின் பெற்றோர் ஏற்றிவைத்ததை அடுத்து, மாவீர்களுக்கு அக வணக்கம் செலுத்தி, தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் நாள் வரையில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## குழப்பத்தைக் கூட்டி வந்த பஸில்

சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து துரத்தி அடிக்கப்பட்ட கையோடு, நாட்டை விட்டு வெளியேறும் முயற்சி கட்டுநாயக்கா விமான நிலையப் பணியாளர்களால் முறியடிக்கப்பட்ட சூழலில் நாட்டில் அரசியல் அஞ்ஞாதவாசம் புரிந்த முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நிலைமை சுமுகமடைந்ததும் சில காலம் அமெரிக்காவில் அடங்கி இருந்த நிலையில், நேற்று நாடு திரும்பியிருக்கிறார்.

தென்னிலங்கை அரசியலில் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கட்டு சரிந்து சிதறிய போது, 'கபுடா' [காகம்] என்று மிக மோசமாக விமர்சிக்கப்பட்ட பஸில் ராஜபக்ஷ, அந்தப் பின்னடைவு நிலையில் சற்றுப் பதுங்கி அமைதி காத்தார்.

இப்போது மீண்டும் அரசியலில் பாயத் தயார் நிலையில் நாடு மீண்டிருக்கிறார்.

அவரது மீள் வருகை, 'மீண்டும் தொடங்கும் மிடுக்கா?' அல்லது 'மீண்டும் தொடங்கும் இடுக்கா?' என்பது இனிமேல் தெரிய வரும்.

எனினும் நாட்டுக்குள் வரும்போது சர்ச்சைகளுடன்தான் அவர் வந்திருக்கின்றார் என்பது அவதானிக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

நாட்டில்நீதி, நியாயமான ஆட்சி நடைபெறுவதற்காக, முக்கிய அரசுக் கட்டமைப்புகளை கையாள சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

அந்த ஆணைக்குழுக்களில் இடம் பெறுவோர் கட்சி சாராமல், அணிகட்டாமல், அரசியல் செய்யாமல், நடுநிலைப் பிரமுகர்களாகச் செயல்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு.

கட்சிகளுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரை இத்தகைய ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கவே கூடாது என்பது கட்டாயமான நிலைப்பாடாகும்.

இந்த சுயாதீன ஆணை குழுக்களுக்கு நியமிக்கப்படுவோர் சொல்லிலும் செயலிலும் அல்லது நடத்தையிலும் தங்களின் பக்கம் சாரா சுயாதீனப் பண்புகளை எப்போதும் வெளிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக எதிர்பார்க்கப்படும் அம்சமாகும். இப்படியான சுயாதீன ஆணைகளுக்கு நியமிக்கப்படுவோர் குறைந்தபட்சம் தமது பதவிக்காலத்திலாவது தங்களின் சுயாதீனத் தன்மையை வெளிக்காட்ட வேண்டும். அரசியல்வாதிகள் மற்றும் தொடர்பான தரப்புகளுடன் தங்களை அவர்கள் அடையாளப்படுத்தக் கூடாது.

ஆனால் பஸில் ராஜபக்ஷ நேற்று கொழும்பு வந்து இறங்கிய போது சுயாதீன தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஆணைக்குழு உறுப்பினர் பி.பெரேரா ஆகியோர் விமான நிலையத்துக்குள் போய் பஸில் ராஜபக்ஷவை வரவேற்று அவருடன் சேர்ந்து காரியமாற்றி இருக்கின்றார்கள்.

பஸில் ராஜபக்ஷ இப்போது சாதாரண பிரதேச சபை உறுப்பினர் கூட இல்லை. அவருக்குக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விசேட விருந்தினர் பகுதியில் இடமளிக்கப்பட்டிருக்கின்றது. வீதிப் பாதுகாப்பு பொலிஸார் அவருக்கு விசேட வீதி பாதுகாப்பு ஒழுங்குகளை தாமே முன்னின்று ஒழுங்கு செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் எப்படி சாத்தியமாகும்? நாட்டில் நடப்பது நீதி முறையான ஆட்சியா என்று எதிரணிகள் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டு கிழித்துத் தள்ளியிருக்கின்றன.

அரச கட்டமைப்பின் ஒழுங்கீனந்தான் இவை யாவற்றிற்கும் காரணமானது என்பது துலாம்பரமானது.

## அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக இ.தொ.கா தொழிற்சங்க நடவடிக்கை!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானிற்கும் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் அப்புத்தலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின்கீழ்தொழில்புரியும்தோட்டதொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டது.

அந்தக் கலந்துரையாடலில் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனம் தொழிலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் கெடுபிடி நடவடிக்கைகளை நிறுத்தாவிடின் அந்த நிறுவனத்துக்கு எதிராக நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் வரை ஊவா மாகாணத்தில் உள்ள அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களில் இருந்து ஒரு கிலோகிராம் தேயிலை கூட வெளியே செல்லாது என இ.தொ.கா தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுத்துள்ளது.

## யாழ் . மீனாட்சிபுரம் கிராமத்தில் டெங்கு ஒழிப்பு வேலை திட்டம்

யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொட்டடி மீனாட்சிபுரம் கிராமத்தில் டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்..மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிபுரையின் கீழ் பொது மக்களின் பங்கேற்புடன் இந்த வேலை திட்டம் ஆரம்பமானது.

குறித்த டெங்கு ஒழிப்பு வேலை திட்டத்தில் கொட்டடி பகுதியைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் ,இராணுவம், பொலிஸார் மற்றும் யாழ். மாநகர சபையின் சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## கசிப்புடன் ஒருவர் அச்செழுவில் கைது!

யாழ்ப்பாணம், அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அச்செழு பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 29 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது அவரிடமிருந்து 20 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா, 7 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நீண்ட நாள் கசிப்பு உற்பத்தி முறியடிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பொருள்களுடன் சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அனுமதியின்றி தேக்கு மரப்பலகைகளை ஏற்றிவந்த லொறியும் சாரதியும் கைது!





படல்கும்புர பகுதியில் இருந்து பதுளைக்கு சட்டபூர்வமான அனுமதியின்றி தேக்கு மரப்பலகைகளை ஏற்றி வந்த கனரக லொறியின் சாரதியை பசறை பொலிஸ் நிலையப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது–

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை சுமார் 4.30 மணியளவில் பசறை மடூல்சீமை சந்தை சோதனை சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான லொறியை நிறுத்தி சோதனையிட்டபோது அதில் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரப்பலகைகள் காணப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக லொறியின் சாரதியிடம் விசாரனை நடத்தியபோது அவற்றைப் பதுளைக்கு கொண்டு செல்வதாக அவர் தெரிவித்துள்ளார். எவ்வித சட்டரீதியான முன் அனுமதியும் இன்றி தேக்கு பலகைகள் கொண்டுசெல்லப்படுவதை அறிந்த பொலிஸார் சாரதியை கைது செய்து நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஐந்து மாதங்களின் பின் சீனாவில் கொரோனாவால் ஒருவர் மரணம்



சீனாவில் கடந்த சில நாள்களாகக் கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்ற நிலையில் ஐந்து மாதங்களின் பின்னர் முதலாவது இறப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது. அத்துடன், கடந்த மாதம் வரை ஆயிரத்துக்கும் கீழ் கொரோனா பாதிப்புகள் பதிவாகி வந்த நிலையில், இந்த மாதம் கொரோனா தொற்று மளமளவென உயர்ந்து, தினசரி 25 ஆயிரம் பாதிப்புகள் வரை பதிவாகி வருகின்றன எனக் கூறப்படுகின்றது. இருப்பினும் நீண்ட நாள்களாக கொரோனாவால் உயிரிழப்புகள் எதுவும் பதிவு செய்யப்படாமலேயே இருந்து வந்தது. சீனாவில் கடைசியாக கடந்த மே 26 ஆம் திகதி கொரோனாவால் ஒருவர் உயிரிழந்தார். அதன் பிறகு கடந்த 5 மாதங்களுக்கும் மேலாக அங்கு கொரோனா உயிரிழப்பு எதுவும் பதிவாகவில்லை.

இந்நிலையில் நேற்று சீனாவின் பெய்ஜிங் நகரைச் சேர்ந்த 87 வயது முதியவர் ஒருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். இதனால் அங்கு கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை 5,227 ஆக உயர்ந்துள்ளது. அதே சமயம் சீனாவில் கொரோனா உயிரிழப்புகள் முறையாக பதிவு செய்யப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் நிலவி வருகிறது.

குறிப்பாக ஙங்காய் நகரில் இந்த ஆண்டு மிகப்பெரிய அளவில் கொரோனா பரவல் ஏற்பட்ட போதிலும், அங்கு கொரோனாவால் ஒரு சில உயிரிழப்புகள் மட்டுமே ஏற்பட்டன எனப் பதிவு செய்யப்பட்டது. கொரோனவால் ஏற்படும் உயிரிழப்புகளை இதயக்கோளாறு, சர்க்கரை நோய் உள்ளிட்ட மற்ற உடல்நல பாதிப்புகளாக சீன சுகாதாரத்துறை பதிவு செய்து வருவதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும் இந்த குற்றச்சாட்டுகளை சீன அரசு திட்டவட்டமாக மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. நடத்திய பருவநிலை மாநாட்டில் இழப்பு,சேத நிதியை உருவாக்க ஒப்புதல்




கெய்ரோ, நவ.21

வளர்ந்து வரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்யும் வகையில் இழப்பு மற்றும் சேத நிதியை நிறுவ பருவநிலை மாநாட்டின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.


பருவநிலை மாற்றத்தை சமாளிக்கவும், அதன் தீவிரத்தை குறைக்கவும் ஐ.நா. பருவநிலை மாற்ற பணித்திட்டம் கடந்த 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 1994 ஆம் ஆண்டில் அது முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தது. இந்த பணித்திட்டத்தில் கையெழுத்திட்டுள்ள 198 நாடுகளும், 1995 முதல் ஆண்டுதோறும் பருவநிலை மாநாட்டை கூட்டி, பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விவாதித்து வருகின்றன.

அந்த வகையில் ஐ.நா. பருவநிலை மாற்ற பணித்திட்டத்தின் 27 ஆவது மாநாடு எகிப்து நாட்டின் ஙர்ம் எல் கே் நகரில் கடந்த 6 ஆம் திகதி தொடங்கியது. இந்த மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டு பருவநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கான தங்களின் பரிந்துரைகள் மற்றும் முன்னெடுப்புகள் குறித்து உரையாற்றினர். இந்த மாநாட்டில் முக்கியமாக பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் இழப்பீடு வழங்குவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இதையடுத்து நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட இழப்பு மற்றும் சேத நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் ஒப்புக்கொண்டன. இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் எனவும், இதன் மூலம் வளரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் முதல் முறையாக இழப்பு மற்றும் சேத நிதியை நிறுவ ஒப்புக்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெ. விடுதியில் துப்பாக்கிச் சூடு ஐவர் பலி; 18 பேருக்குக் காயம்!






வொஷிங்டன், நவ.21

அமெரிக்காவின் கொலோரடா மாகாணத்தில் உள்ள கொலோராடா ஸ்பிரிங்ஸ் நகரத்தில் கே நைட் கிளப் ஒன்று உள்ளது. இந்த நைட் கிளப்பிற்குள் நுழைந்த மர்ம நபர் திடீரென நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் பலியாகினர் எனவும் 18 பேர் காயம் அடைந்தனர் எனவும் கூறப்படுகின் றது.

டிரான்ஸ்போபியா என்று சொல்லப்படும் பாலியல் அடையாளம் காரணமாக கொல்லப்படுபவர்களை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 20 ஆம் திகதி மூன்றாம் பாலினத்த வர்களின் நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

இந்த நிலையில், குறித்த கே நைட் கிளப்பில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. துப்பாக்கிச்சூடு நடத்திய நபரைப் பொலிஸார் பிடித்து விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டிற்கான நோக்கம் குறித்து இன்னும் கண்டறியப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

## மலேசிய பொதுத் தேர்தல் முடிவில் தொங்கு நாடாளுமன்ற நிலைமை!

### யாருக்குமே அறுதிப்பெரும்பான்மை இல்லை; ஆட்சியமைப்பதில் கட்சிகளிடையே இழுபறி

மலேசியாவில் கடந்த சில ஆண்டுகளாக அரசியல் குழப்பம் நீடித்து வருகின்ற நிலையில், அங்கு கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 3 பிரதமர்கள் மாறியுள்ளனர். இந்தச் சூழலில் கடந்த மாதம் மலேசியா நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்படி நேற்று முன்தினம் மலேசியாவில் நாடாளுமன்ற தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்றதுடன் வாக்குப்பதிவும் முடிவடைந்து உடனடியாக வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகியிருந்தன.

இந்நிலையில் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. 222 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான சீர்திருத்தக்கூட்டணி 83 இடங்களில் வெற்றி பெற்றதுடன் முன்னாள் பிரதமர் முகைதீன் யாசின் தலைமையிலான தேசிய கூட்டணி யாரும் எதிர்பாராத விதமாக 73 இடங்களை கைப்பற்றியது. அதே சமயம் சுதந்திரம் பெற்றதில் இருந்து 2018 ஆம் ஆண்டு வரை மலேசியாவை ஆட்சி செய்து வந்த ஐக்கிய மலாய் தேசிய கூட்டணி வெறும் 30 இடங்களை பிடித்து படுதோல்வியைச் சந்தித்தது.

ஆட்சி அமைப்பதற்கு 112 இடங்கள் தேவை என்கிற நிலையில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் புதிய அரசை அமைப்பதில் மேலும் குழப்பம் நீடிக்கிறது. அதே சமயம் பெரும்பான்மையை பெற போதுமான ஆதரவு இருப்பதாக அன்வர் மற்றும் முகைதீன் ஆகிய இருவருமே கூறி வருகின்றனர். இந்த தேர்தலில் மலேசியாவின் பிரதமராக 2 முறை பதவி வகித்தவரும் முதுபெரும் அரசியல்வாதியுமான மகாதீர் முகமது தேசிய கூட்டணி வேட்பாளரிடம் தோல்வியைத் தழுவியமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவால் 14 வீத நிறுவனங்கள் இந்தியா முழுவதிலும் செயலிழந்தன



புதுடெல்லி, நவ.21

இந்தியா முழுவதும் கொரோனா பாதிப்பு வேகமாக பரவியதையடுத்து 2020 மார்ச் மாதம் நாடு தழுவிய ஊரடங்கை மத்திய அரசு அறிவித்தது. ஊரடங்கால் மக்கள் அனைவரும் தங்கள் தொழிலை நடத்த முடியாமல் அவதிபட்டனர். மேலும், ஆயிரக்கணக்கான சிறு, குறு, நிறுவனங்கள் தொழிலை நடத்த முடியாமல் நிரந்தரமாக மூடப்பட்டன. ஊரடங்கால் இந்தியா நாடளாவிய ரீதியில் பொருளாதார இழப்பை எதிர் கொண்டது.

இந்த நிலையில், கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் இந்தியாவில் 14 வீதமான சிறு, குறு நிறுவனங்கள் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோர்களுக்கான உலகளாவிய கூட்டணி அமைப்பு (கேம்), கொரோனா காலகட்டத்தில் இந்தியாவில் தொழில் துறை எதிர்கொண்ட பாதிப்புகள் தொடர் பாக ஆய்வு மேற்கொண்டு வெளியிட்ட அறிக்கை யிலே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இந்தியாவில் கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் 14 சதவீத சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன எனவும் பணப் புழக் கம் இல்லாததன் காரணமாகவே இந்நிறுவனங் கள் மூடப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வங்கிகளில் இந்நிறுவனங்களில் நாற்பது வீதமான நிறுவனங்களுக்கு கடன் மறுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக தொழிலை தொடர்ந்து நடந்த முடியாத நெருக்கடிக்கு அந்த நிறுவனங்கள் உள்ளாகியுள்ளன என்றும் அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# வீதியோரம் சென்றவர்களை லொறி பந்தாடியதில் பன்னிரண்டு பேர் பலி

## பீகார், வைஷாலியின் சுல்தான்பூர் கிராமத்தில் நேற்று அதிர்ச்சி



பாட்னா, நவ.21

பீகார் மாநிலத்தின் வைஷாலி மாவட்டம் சுல்தான் பூர் கிராமத்தில் நேற்றையதினம் வீதியோரம் சென்று கொண்டிருந்தவர்கள் மீது வேகமாக வந்த லொறி மோதியதில் சம்பவ இடத்திலேயே பெண்கள், குழந்தைகள் உள்பட 9 பேர் பரிதாபமாக பலியாகி யுள்ளனர். மேலும் 3 பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் பலியாகியுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணையில் வேகமாக சென்ற லொறி கட்டுப்பாட்டை இழந்ததே விபத்துக்குக் காரணம் என தெரிய வந்துள்ளது. மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளமையால் பலி எண்ணிக்கை உயரலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வீதியோரம் சென்றவர்கள் மீது லொறி மோதிய விபத்தில் 12 பேர் பலியானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், பீகார் விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில்–

பீகார் மாநிலத்தில் நடந்த சாலை விபத்து வருத்தம் அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல். – எனத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில்–

பீகார் மாநிலம் வைஷாலியில் நடந்த விபத்து வருத்தம் அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்கள். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையட்டும் – என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இறந்த ஒவ்வொருவரின் உறவினர்களுக்கும் பிரதமர் நிவாரண நிதியில் இருந்து ரூபா 2 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்றும் காயம் அடைந்தவர்களுக்கு ரூபா 50,000 வழங்கப்படும் எனவும் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நிலக்கரித் திருட்டில் ஈடுபட்ட நான்கு பேர் சுட்டுக் கொலை!

## இருவர் காயம்; ஜார்க்கண்டில் சம்பவம்

தான்பாத், நவ.21

ஜார்க்கண்ட் மாநிலம் தான்பத் மாவட்டத்தில் நிலக்கரி திருடும் கும்பலை தடுத்தபோது ஏற்பட்ட துப்பாக்கி சண்டையில் 4 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாக்மரா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட டெனிதிஹ் நிலக்கரி சேமிப்பு பகுதியில் மத்திய தொழிலக பாதுகாப்பு படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஒரு கும்பல் நிலக்கரியைத் திருடுவதைப் பார்த்தனர். அங்கு விரைந்த பாதுகாப்பு படையினர், நிலக்கரி திருட்டைத் தடுத்தனர். அப்போது நிலக்கரி திருடர்கள் திடீரென தாக்கத் தொடங்கியதையடுத்து பாதுகாப்புப் படையினரும் பதிலடி கொடுத்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் 4 திருடர்கள் கொல்லப்பட்டமையுடன், 2 பேர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில்

சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு இந்த சம்பவம் நடந்துள்ளது. ஆயுதங்களுடன் நிலக்கரி திருடர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# சென்னை விமான நிலையத்தின் புதிய முனையம் டிசம்பரில் திறப்பு

மீனம்பாக்கம், நவ.21

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் உள்நாடு, பன்னாட்டு முனையங்களை இணைத்து புதிய நவீன முனையம் அமைக்கும் பணி 2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்தியப் பிரதமா மோடி, காணொலிக் காட்சி மூலம் இந்த பணியை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்தியப் பெறுமதியில் ரூபா.2,467 கோடி மதிப்பீட்டில் 2 லட்சத்து 20 ஆயிரத்து 972 சதுர மீட்டா பரப்பில் கட்ட திட்டமிடப்பட்ட இந்த பணிகள் 2 கட்டங்களாக செய்யவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி முதல் கட்டபணியில் 6

அடுக்கு 'மல்டிலெவல் கார் பார்க்கிங்', நவீன வசதிகளுடன் வருகை, புறப்பாடு முனையம் ஆகியவைகளும், பயணிகளுக்குப் பாதுகாப்பு சோதனை, குடியுரிமை சோதனை, சுங்கச்சோதனை ஆகியவற்றுக்கான விசாலமான கூடங்கள், கூடுதல் கவுண்ட்டாகள், வி.வி.ஐ.பி.களுக்காக ஓய்விடங்கள், பயணிகள் தங்கும் அறைகள் உள்ளிட்டவைகள் கட்டப்பட்டன.

விமான நிலைய முதல் கட்ட பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளமையால் அடுத்த மாத இறுதிக்குள் நவீன வசதிகளுடன் கூடிய முதல் கட்ட புதிய முனையங்களை திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்பிறகு தற்போது பயன்பாட்டில் உள்ள பன்னாட்டு வருகை முனையம் கட்டடத்தை இடிக்கும் பணி தொடங்கவுள்ளதுடன், அதைதொடர்ந்து 2 ஆம் கட்ட கட்டுமான பணிகள் தொடங்கப்படும். இதனால் சென்னை விமான நிலையத்தை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை வரும் 2024 ஆம் ஆண்டு டிசம்பரில் 35 கோடியாக இருக்கும் என்றும் தற்போது பயணிகள் எண்ணிக்கை 17 கோடியாக உள்ளது எனவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பட்டாசு வெடித்ததில் பற்றி எரிந்தது ஆலயக் கோபுரம்..!!


விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் உள்ள பத்திரகாளியம்மன் கோவிலில் கடந்த 6 மாதங்களாகக் கும்பாபிஷேகத்துக்காக பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் கோவில் கோபுரம் முழுவதும் பிளாஸ்டிக் கவர்களை கொண்டு மறைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் நேற்று மாலை அந்த வழியாக சுப நிகழ்ச்சிக்காக சீர் கொண்டு சென்றவர்கள் பட்டாசுகளை வெடித்தனர் என்று கூறப்படுகிறது. இதில் ஒரு சில பட்டாசுகள் கோபுரத்தின் மீது சுற்றப்பட்டிருந்த பிளாஸ்டிக் கவர்கள் மீது விழுந்து வெடித்துச் சிதறின.

இதன் காரணமாக தீ மளமளவென கோபுரம் முழுவதும் பரவியதுடன் அதில் கட்டப்பட்டு

இருந்த மரக்கட்டைகளிலும் தீப்பிடித்தது. இதனால் தீ கோவில் கோபுரத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது. இதுகுறித்து உடனடியாக தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.


இதனைத் தொடர்ந்து 2 வாகனங்களில் வந்த தீயணைப்பு வீரர்கள் உடனடியாக கோவிலுக்குள் சென்று கோபுரத்தின் மீது ஏறி தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர் . சுமார் ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீயை அவர்கள் அணைத்தனர் என்ற தெரிவிக்கப்பட்டது.



# கல்முனை பொலிவேரியனில் மக்கள் தொடர்ந்தும் நெருக்கடி, இக்கட்டில்!

## கல்முனை மாநகர சபையின் அசமந்தம் எனக் குற்றச்சாட்டு





(நூருல் ஹுதா உமர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்ததன் பின்னர் கடந்த மஹிந்த அரசினால் நிர்மாணித்து கொடுக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராம மக் கள், அதன் பின்னர் நான்கு ஜனாதிபதிகளையும் மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களை சந்தித்தும் இதுவரை தம்முடைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை என ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள வீதிகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளன. தரமற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் பாதைகள் உடைந்து காணப்படுகின்றன. பல தடவைகள் அதிகாரிகள், அரசியல் வாதிகளுக்கு எடுத்துரைத்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்று அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். மழைகாலங்களில் பாம்பு போன்ற நச்சு விலங்குகள் வீடுகளை நோக்கிப் படையெடுக்கும் நிலை உள்ளதாகவும் மக்கள் குறை கூறுகின்றனர்.


வீதிகளில் குளம் போன்று நீர் தேங்கி நிற்பனதால் பாதசாரிகளும், பாடசாலை மாணவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அடிக்கல் நடப்பட்டு பல வருடங்கள் மற்றும் பல மாதங்கள் கடந்தும் வீதி அபிவிருத்திக்கு நடப்பட்ட எந்த அடிகற்களுக்கான திட்டமும் இன்னும் செயலுருவம் பெறவில்லை என்றுவைகள் தெரிவிக்கின்றனர்.

வடிகான்கள் நீர் வடிந்தோடமுடியாதளவு மண்ணால் அடைபட்டு இருக்கின்றன. டெங்கு உட்பட பல்வேறு நோய்களைஉண்டாக்கும்தன்மைகொண்டகொள்கலன்கள் வடிகான்களில் வீசப்பட்டும் காணப்படுகின்றன. வடிகான்களுக்கு பொருத்தமான மூடிகள் இடப்படாமையினால் சிறுவர்கள் அடிக்கடி விபத்துக்களை சந்திக்கிறமையுடன் பெரியோர்களும் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

இது தொடர்பில் கல்முனை மாநகர பொறியியல் பிரிவினரும், பிரதேசத்திற்கு பொறுப்பான மாநகர சபை உறுப்பினர்களும் அசமந்தபோக்குடன் செயற்படுகின்றனர் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். உரிய அதிகாரிகள் இந்த பிரச்சினைக்கு உடனடி தீர்வை வழங்க முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# உலக சுகாதார ஸ்தாபன நிபுணர்கள் குழு கல்முனை ஆதாரவைத்தியசாலை விஜயம்!

## நாள் பராமரிப்பு வைத்திய சேவைத் திட்டத்திற்கு கிழக்கில் தெரிவு

(வி.ரி.சகாதேவராஜா)

உலக சுகாதார ஸ்தாபன வைத்திய நிபுணர்கள் நேற்று முன்தினம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர்.

நாள் பராமரிப்பு வைத்திய சேவை முறையை (ம்ழிதீ உழிஷள விதீவிமிளது) இவ் வைத்தியசாலையில் முன்னெடுப்பதற்கான சாத்தியவள அறிக்கையை தயாரிக்கும் பொருட்டு மேற்படி குழுவினர் அங்கு விஜயம் செய்தனர்.

இவ் விஜயத்தில் உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி அமெரிக்க டுக் பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியகலாநிதி சியுங்கிர்ல் அஹ்ன் மற்றும் நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் களனிப் பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியகலாநிதி செகான் வில்லியம்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்களை கல்முனை ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் வரவேற்றார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் 'நாள் பராமரிப்பு வைத்திய சேவை முறைமை' நிகழ்ச்சி திட்டத்திற்குக் கிழக்கு மாகாணத்திலிருந்து கல்முனை வடக்கு ஆதார

வைத்தியசாலை மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்காக உலக சுகார அமைப்பின் பிரதிநிதிகள் வைத்தியசாலைக்குக் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள்.

இதன் போது, நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாளிலேயே அவருக்கான சகல மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு குறித்த நாளிற்குள் வீடு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்வது அதன் நோக்கமாகும்.

அதன் மூலம் நோயாளியின் மனநிலை மிகச் சிறப்பாக அமைவதோடு அரசாங்கத்திற்கு ஏற்படும் மேலதிக விரயங்களும் தவிர்க்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையிலான வைத்திய நிபுணர் குழாம் மற்றும் பொறுப்பு அதிகாரிகளினால் பல சாதகமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. பல பின்னூட்டல்களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் வருகை தந்த இரு பிரதிநிதிகளும் வைத்தியசாலை நடைமுறைகளைப் பார்வையிட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் தரமானதும் வினைத்திறனானதுமான வைத்திய சேவையை முன்னெடுப்பதன் காரணமாகவே இவ் வைத்தியசாலையை இந் நிகழ்ச்சி திட்டத்

திற்கு தெரிவு செய்ததாக உலக சுகாதார நிறுவனம் நிபுணர்கள் தெரிவித்தனர்.

# அனுமதிப்பத்திரமின்றி மூன்று லொறிகளில் 120 ஆடுகளை ஏற்றிச் சென்ற ஐவர் கைது!

## திருகோணமலை அக்போபுர பொலிஸ் நடவடிக்கை



திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி 120 ஆடுகளை கொண்டு சென்ற ஐந்து பேரை நேற்று அதிகாலை தாங்கள் கைது செய்துள்ளனர் என் அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருணாகல், கொழும்பு பகுதியைச் சேர்ந்த 20 வயதிலிருந்து 40 வயதுக்குட்பட்ட ஐந்து சந்தேக நபர்களை இவ்வாறு 120 ஆடுகளுடன் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் மூன்று லொறிகளில் கிண்ணியா, வான்எல, தோப்பூர் மற்றும் கந்தளாய் போன்ற பகுதிகலிருந்து மூன்று லொறிகளில்சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு போதே அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் 120 ஆடுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களைத் தடுத்து வைத்துள்ளதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் நேற்றுத் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் ஆடுகளை கொண்டு செல்லப்பயன்படுத்திய மூன்று லொறிகளும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# உலக ஈழத்தமிழர்களை ஜனாதிபதி கவர வேண்டுமானால் வன்னி மாவட்ட மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்!

## சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து

உலகத்தில் இருக்கின்ற ஈழத் தமிழர்களை கவர்வதற்காக ஜனாதிபதியின் வவுனியா, மன்னார் விஜயமாக இருந்தாலும் இந்த வன்னி மாவட்டத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படும்போதே அவரின் கனவு நனவாகும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் செய்தியில்–

ஜனாதிபதி 19 திகதி வவுனியாவிற்கும் 20 ஆம் திகதி மன்னாருக்கும் வருகை தர உள்ளார் என எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா மன்னாருக்கு கண்ணாணிப்பு விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, வன்னி மாவட்டத்தில் இருக்கின்ற விடேமான பிரச்சனைகள் தொடர்பாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மிக முக்கியமாக காணி அபகரிப்பு அத்துடன் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு எரிபொருள் கொள்வனவுசெய்யமுடியாதநிலை, மண்ணெண்ணெயினுடைய விலை தொடர்பாகவும் மீனவர் சமூகம் மிகவும் அதிருப்தியில் இருக்கிறார்கள்.

அதைவிட, விவசாயிகள் விவசாயத்துக்குத் தேவையான பசளை கிருமிநாசினிகளுடைய விலைகள் தொடர்பாக மிகவும் அதிருப்தியில் இருக்கிறார்கள். கடந்த போகத்தில் உற்பத்தி செய்த நெல்லைக் கூட பி.எம்.பி நிறுவனம் கொள்வனவு செய்வதற்கு பணம் இல்லாமல் நிறுத்தி இருக்கிறது. இதனால் விவசாயிகள் அதிருப்பிதியில் இருக்கிறார்கள்.

இவ்வாறு மக்கள் பல விடயங்களில் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்ற நெருக்கடியான சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே ஜனாதிபதியினுடைய வருகை மூலமாக நெருக்கடி நிலைகளும் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் அப்படி தீர்க்காவிட்டால் மக்களுக்கு ஏமாற்றமாக அமையும்.



ஜனாதிபதியின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்று அவர் சிந்தித்து இருக்கலாம். உலகத்தில் இருக்கின்ற ஈழத் தமிழர்களைக் கவர்வதற்காக அவர் இந்தப் பயணத்தை எண்ணியிருக்கலாம். ஆனால் அவர் வருகையால் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கேட்டுக் கொண்டார்.

# வித்துவான் கருணாகரனின் மறைவு எங்கள் இசை உலகுக்குப் பேரிழப்பு

## பேராசிரியர் சண்முகலிங்கன் அஞ்சலி



எங்கள் இசை உலகின் பேராசான் சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரன் அவர்களின் பிரிவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

– யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் இவ்வாறு தாம் வழங்கிய அஞ்சலிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கர்நாடக இசையின் எல்லைகளைத் தொட்டு நிறைந்த இசை ஞானத்துடன் எங்கள் பண்பாட்டுக்கு பெருமை சேர்ந்தவர் கருணாகரன் அவர்கள்.

தந்தை வழியான இசைநாடக பாரம்பரிய ஆற்றலுடன், தமிழகத்தின் இசைக்கலை பேராளுமைகளிடம் முறையான கல்வியை கற்று, எங்கள் தேசத்து இசைக்கலை வளர்ச்சியில் தனித்துவமாய் பணியாற்றியவர். எங்கள் பல்கலைக்கழகத்து இராமநாதன் நுண்கலைக்கழகம், இலங்கை வானொலி, ஆலாபனா – இசை மேம்பாட்டுக்கான செயற்பாட்டு நிறுவனம் என அவரது பணிக்களங்கள் விரிந்தவை. அவருடன் பழகிய, அவர் பணிகளில் நெருங்கி செயற்பட்ட பொழுதுகளும், அவரிடம் பாடம் கேட்க – வாய்த்த – பெரும் பேறும் என்றென்றும் நெஞ்சிலே போற்றிக் காக்கப்படுவன.

ஈடுசெய்யமுடியாத பேரிழப்பில் தவிக்கும் அவர் குடும்பத்தினருடனும் இசை உலக உறவுகளுடனும் என் ஆத்ம அஞ்சலியை காணிக்கை ஆக்குகின்றேன். – என்று பேராசிரியர் என்.சண்முகலிங்கன். மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ்க் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இளைஞர் மத்தியில் பரப்பும் வேலைத் திட்டம்!

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினரால் தமிழ் கலாசார பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்கள் மத்தியில் பரப்பும் வேலை திட்டம் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்ட நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நல்லூர் வீதியில் உள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் முதலாவது செயற்திட்டம் ஆரம்பமாகியது.

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் கடந்த ஒரு வருடங்களாகப் பல பண்பாட்டு விழுமிய செயற்பாடுகளைச் செய்துகொண்டு வருகின்றது. நூல்களை வெளியிட்டு வருகின்றது. கலை நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கின்றது. நடத்தியும் வருகிறநிலையில் தமிழ் பண்பாட்டு விழுமிய செயற்பாடுகள் மெல்ல மெல்ல எம்மிடமிருந்து அருகி செல்கின்ற நிலையிலே ஓர் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை காலையிலே இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது. ஒரு நற் சிந்தனை, பண்ணிசை, கோலம் போடுதல், காவடியாட்டம் எனும் இவை போன்ற எங்களுடைய பாரம்பரிய செயற்பாடுகளை நாம் இளைஞர்கள் மத்தியிலும் மற்றும் நாட்டமுள்ளவர்கள் மத்தியிலும் பரப்புவதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையான நேற்று நல்லூர் வீதியில் உள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் மாலை கட்டுதல் வகுப்புகள் இடம் பெற்றிருந்ததோடு இந்துசாதனம் இதழாசிரியர் சிவஸ்ரீ தி.மயூரகிரி சிவாச்சார்யார் சிறப்புரை ஆற்றினார்.

# யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸாரால் தாய், மகன் உள்ளிட்ட மூவர் கைது!



கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஊரெழு மேற்கு பொக்கனை பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ். மாவட்ட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த ரகசிய தகவல் அடிப்படையில் தாய் , மகன் மற்றும் வீட்டிற்கு அருகில் வசிக்கும் அயலவர் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் நீண்ட காலமாகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 15 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# கிளிநொச்சியில் மாவீரகளின் பெற்றோர் உறவினர்களை கௌரவிக்கும் நிகழ்வு!







மாவீரர்களின் பெற்றோர் உறவினர்களை கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி புன்னை நீராவி அலுவலர் பிரிவில் இவர்களின் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கலந்துகொண்டு மாவீரகளின் பெற்றோர் உறவினர்களை கௌரவித்தார்.

## சந்தேக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக, டுபாய் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு மனிதக் கடத்தலில் ஈடுபட்ட பிரதான சந்தேகநபரின் உள்ளூர் முகவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டு, கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, இலங்கைப் பெண்களை மத்திய கிழக்கு நாடுகளான ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சட்டவிரோதமான முறையில் அனுப்பும்செயற்பாட்டுடன்தொடர்புடைய பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கட்சித்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்வதற்காக நாடாளுமன்றில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் சஜித் அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்திருந்தனர். அவர்களுடனும் அவர்களின் ஏற்பாட்டில் அக்கட்சியின் ஏனைய சில உறுப்பினர்களுடனும் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அக்கட்சியின் முக்கியஸ்தரான ராஜித சேனாரத்னவும் ரணிலுடன் இணையவுள்ளார் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அவர் இப்போதெல்லாம் அரசுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு அப்பால் ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் வலை விரிக்கப்பட்டுள்ளது. அவர்களுள் ஒருவர் அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன். அவ ருடன் சேர்த்து அவ ரின் கட்சி உறுப்பினர் கள் அனைவரையும் முற்றாக இணைப்பதற்கான நகர்வு ஒன்று இடம்பெறுவதை அறிய முடிகின்றது.

மறுபக்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான். அவரும் அரசுக்கான ஆதரவை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசில் ஜீவன் அமைச்சுப் பதவியை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களை வளைத்துப் போடும் வேலையை முன்னின்று செய்பவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் -முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க. அவரது வீட்டிலேயே இது தொடர்பான இரகசியக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என்று அறிய முடிகின்றது. இணைகின்றவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்காகவே ஜனாதிபதி புதிய அமைச்சரவையை நியமிக்காமல் இழுத்தடித்து வருகின்றார் என்று ஜனாதிபதி வட்டாரம் தெரிவிக்கின்றது.

## தமிழர்வாழ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்தில் ஈடுபட்டு தங்களது உயிர்களைத் தியாகம் செய்த வீரமறவர்களை நவம்பர் 21ஆம் திகதி முதல் ஒரு வாரம் நினைவேந்தி நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் வருடாந்தம் முன்னெடுக்கப்படும்.

இந்த ஆண்டும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மாவீரர் நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பமாகியுள்ளது. தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர்தேசங்களில்நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

தாயகத்தில் இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துயிலும் இல்லங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவுத் தூபியில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது பல்கலைக்கழக மாணவர்களால் மாவீரர் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் நாளான எதிர்வரும் 27ஆம் திகதி வரை அஞ்சலி நிகழ்வை முன்னெடுப்பதற்கான ஏற்பாடு மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாவீரர் நினைவுத் தூபிப் பகுதி பல்கலைக்கழக மாணவர்களால் வர்ணம் தீட்டப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ளதுடன் தூபியைச் சுற்றி சிவப்பு, மஞ்சள் நிறத்திலான வர்ணக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2022 இல் வெளியிடப்பெற்றது.